**சுருக்கம்**

நிருவாகம் – உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊர்தி ஓட்டுநர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல (எம்1) துறை

**அரசு ஆணை (நிலை) எண்.316** **நாள் :15.10.2014**
ஜய புரட்டாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க

1. ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை அவர்களின் ந.க. எண். 0445/உபாதச/2013–இரு5, நாள் 20.01.2014 மற்றும் 26.08.2014.

---

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை அவர்கள் தமது அலுவலகத்தில் பணிபுரியும் 4 அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை பெறவும், இதற்கான கட்டணத்தை உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை அலுவலகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கணக்குத் தலைப்பில் பணம் பெற்று போக்குவரத்து கழகத்திற்கு செலுத்தி, இலவச பயண அட்டை பெற்றுக்கொள்ள ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, அதனை ஏற்கலாமென முடிவு செய்து, ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் 3 அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கும் மற்றும் சைதாப்பேட்டை உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அலுவலகத்தில் பணிபுரியும் 1 அரசுத் துறை ஊர்தி ஓட்டுநருக்கும் இலவச பேருந்து பயண அட்டையை அக்டோபர் 2014 முதல் மார்ச் 2015 வரை ஆறு மாதங்களுக்கு வழங்கவும், செலவினத் தொகையை 2014–2015 ஆம் ஆண்டில் அத்துறைக்கென ஒதுக்கப்பட்ட சில்லரைச் செலவினத்திலிருந்து மேற்கொள்ளவும் அதற்குரிய தொகையை உரிய போக்குவரத்து கழகத்திற்கு செலுத்தவும், ஆணையர் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அவர்களுக்கு அரசு அனுமதித்து ஆணையிடுகிறது.

3. இதற்குரிய செலவினத்தை ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, ஓட்டுநர்களுக்கும் மற்றும் சைதாப்பேட்டை, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஓட்டுநருக்கும் முறையே கீழ்காணும் கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது:-

i) 2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 06 பொது சுகாதாரம் – 001 – நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் 1 திட்டத்தில் சேராதது AH உணவு பாதுகாப்பு பிரிவு – தலைமையிட நிர்வாகம் – 05 – அலுவலகச் செலவுகள் – 02 – ஏனைய சில்லரைச் செலவுகள்.
(த.தொ.கு 2210 – 06 – 001 – AH – 0528)

ii) 2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 06 பொது சுகாதாரம் – 001 – நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் 1 திட்டத்தில் சேராதது AI உணவு பாதுகாப்பு பிரிவு – மாவட்ட நிர்வாகம் – 05 – அலுவலகச் செலவுகள் – 02 – ஏனைய சில்லரைச் செலவுகள்.
(த.தொ.கு 2210 – 06 – 001 – AI – 0526)

4. இவ்வாணை போக்குவரத்து மற்றும் நிதித்துறைகளின் அ.சா.கு எண். 8906/வி1/2014–1, நாள் 11.07.2014 மற்றும் அ.சா.கு எண்.52419/சுI/2014, நாள் 07.10.2014–ல் இசைவுகள் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசுச் செயலாளர்

பெறுநர்:

ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, சென்னை–6.
உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக அலுவலகம், சைதாப்பேட்டை, சென்னை–15.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (கணக்கு), சென்னை – 18 (பெயரில்).
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை –1), சென்னை – 35 (பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 8/35.

நகல்
போக்குவரத்துத் துறை, சென்னை – 9.
நிதி (சுகாதாரம்–1) துறை, சென்னை – 9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தரவு களம்), சென்னை – 9.
இ.கோ. உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

28/10/14